கூட்டு முயற்சியால் கழகம் வலுப்பெறுதல் கண்டோம்!

சங்கிலித் தொடர்புபோல் கிளைகள் நிறுவி சலியாது உழைப்போம்!

—(0)—

அடக்குமுறையால் வாழும் ஆட்சி ஜனநாயக ஆட்சியாம்!

—(0)—

Phone No 4502
[விலை அரை அணா]

Regd.No.M. 5458
[இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—1—50) வெளியூர் (29—1—50) [இதழ் 154

சென்னை மாநாட்டில் தோழர் சித்தையன் தலைமையுரை

நம் இயக்கத்தின் கிளைக் கழகங்கள் சுமார் 414-க்கு மேல் துவக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 350-க்கு மேற்பட்ட மாபெரும் பொதுக் கூட்டங்களைச் சென்ற நான்கு மாதத்திற்குள்ளாக நடத்தியிருக்கிறோம். நமக்கிருந்த வசதிகளை எண்ணிப் பார்த்தால், இந்த எண்ணிக்கை மிகவும் அரிய சாதனையேயாகும். நமது கழகம் பணமேயில்லாது துவக்கப்பட்டதாகும். இதற்கு நாடகச் சரித்திரத்தில் வேறு கட்சிகளின் நிலை காண்பதரிது. நமக்கோ பத்திரிகை வசதிகளில்லை. மேலும் நமது உண்மையான பிரசாரத்துக்கு இந்நாட்டின் பிற பத்திரிகைகள் காட்டிவருவது அலட்சியமேயாகும். நாம் ஓரளவுக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்றால், அதற்கு முக்கிய காரணம் எதிரிகளின் விஷமப்பிரசாரமேயாகும். அது நம்மைவிளம்பரப்படுத்தியிருக்கின்றது. கொள்கைகளில் நமக்கிருந்த ஆழ்ந்த பற்றும், உறுதியும், இயக்கத்தோழர்களின் தளராத ஊக்கமும், உற்சாகமும், தளபதியின் தளராத உழைப்பும், சக்கரமெனச்சுற்றும் இயக்கப் பேச்சாளர்களின் சுறுசுறுப்பும், நம்மை நல்லதொரு நிலைக்குக்கொண்டு வந்துவிட்டது.

—சேலம் ஏ. சித்தையன்

[சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டிற்குத் தலைமைதாங்கிய சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்களின் தலைமைச் சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.]

மாநாட்டுப் பிரதிநிதிகளே! தோழர்களே!

இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பெரும் பொறுப்பை என் மீது வரவேற்புக் கழகத்தினர் சுமத்தியபோது, முதலில் நான் மறுத்துக் கூறினேன். வரவேற்புக் கழகத் தோழர்களின் வற்புறுத்தல் மேலும் மேலும் வந்து என்னைத் தாக்கவே, அவர்களின் விருப்பத்திற்கு நான் கட்டுப்படவேண்டியவனாகிவிட்டேன். தலைமையேற்கத் தகுதியும், திறமையும் எனக்கு இருக்கிறதோ, இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் இயக்கத்தின் நீண்டநாள் தொண்டன் என்ற தன்மை கருதி இப்பொறுப்பு என்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். வரவேற்புக் குழுவினருக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்வுக்கு உழைப்பே காரணம்!

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்த நாம், சென்ற செப்டம்பரில், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இப்புதிய அமைப்பை ஏற்படுத்திக்கொண்ட பிறகு, இயக்கப் பணியில் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளோம் என்று ஆராய்வது, நமது எதிர்கால வேலைத் திட்டங்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதுகிறேன்.

இயக்கத்தின் கிளைக் கழகங்கள் சுமார் 414-க்கு மேல் துவக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 350-க்கு மேற்பட்ட மாபெரும் பொதுக்கூட்டங்களைச் சென்ற நான்கு மாதத்திற்குள்ளாக நடத்தியிருக்கிறோம். நமக்கிருந்த வசதிகளை எண்ணிப்பார்த்தால், இந்த எண்ணிக்கை மிகவும் அரியசாதனையேயாகும். நமது கழகம் பணமேயில்லாது துவக்கப்பட்டதாகும். இதற்கு நாடகச் சரித்திரத்தில் வேறு கட்சிகளின் நிலைகாண்பதரிது. நமக்கோ பத்திரிகை வசதிகளில்லை. மேலும் நமது உண்மையான பிரசாரத்துக்கு இந்நாட்டின் பிற பத்திரிகைகள் காட்டிவருவது அலட்சியமேயாகும். நாம் ஓரளவுக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்றால், அதற்கு முக்கிய காரணம் எதிரிகளின்விஷமப்பிரசாரமேயாகும். அது நம்மை விளம்பரப்படுத்தியிருக்கிறது. கொள்கைகளில் நமக்கிருந்த ஆழ்ந்த பற்றும், உறுதியும், இயக்கத் தோழர்களின் தளராத ஊக்கமும், உற்சாகமும், தளபதியின் தளராத உழைப்பும், சக்கரமெனச் சுற்றும் இயக்கப் பேச்சாளர்களின் சுறுசுறுப்பும் நம்மை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

செய்தவை சில: செய்யவேண்டியவை பல

இத் திங்களின் துவக்கத்தில்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

டெலிபோனில் பேசும்போது நபர் தெரியும் புதிய சாதனம்

உலகிலேயே முதல் தடவை ஒயிட் ஹவுஸில் நிறுவனம்

வாஷிங்டன், ஜன. 27— டெலிபோனில் பேசும்போது, பேசும் நபரின் உருவம் ஒரு சிறிய ஸ்கிரீனில் தெரியும்படியான 'விஷன் டெலிபோன்' அமெரிக்க பிரஸிடெண்ட் மாளிகையான ஒயிட் ஹவுஸில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உலகிலேயே முதன்முதலாக இந்த நூதன டெலிபோன் வைக்கப்படுவது இங்குதான். பிரஸிடெண்ட், அவருடைய ஆலோசனையாளர்கள், காரியதரிசிகள் இவர்களுடைய அறைகளில் இது பொருத்தப்பட்டிருக்கிறது.

பிரஸிடெண்டுடன் பேசியவர்கள் மட்டும் பிரஸிடெண்டின் உருவத்தையும் ஸ்கிரீனில் காண முடியுமாம். -குளோப்

ஹோசிமின்னை கடைசிவரை எதிர்ப்பாராம்

பாரிஸ், ஜன. 29— வியட்நாம் தலைவர் ஹோசிமின்னை கடைசிவரை எதிர்த்து, அமைதியை இந்தோசீனாவில் நிலைநாட்டப்போவதாக மாஜி அன்னம் மன்னர் பாவ்டே கூறியிருக்கிறார்.

அறிவிப்பு

திடீரென்று ஏற்பட்ட அச்சு இயந்திர வசதிக் குறைவால் "மாலை மணி" ஆறு பக்கங்களில் வெளியிட முடியவில்லை. ஆகவே, இன்று முதல் அரை அணா விலையில், நான்கு பக்கங்களோடு வெளியிடப்படுகிறது. இது தற்காலிகமான ஏற்பாடுதான்.

இந்திய—பாக் கம்யூனிஸ்டுகளை தூண்டுவது யார்

மாஜிசோவியத் கான்ஸல் ஜெனரலாம்

லண்டன், ஜன. 27— இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் கம்யூனிஸ்டுகளைத் தூண்டிவிடுவது நியூயார்க்கிலுள்ள மாஜி சோவியத் கான்ஸல் ஜெனரலான லோமாகின் என்றும், இவர் டாஷ்கெண்ட் என்ற இடத்தில் தன் காரியாலயத்தை அமைத்துக் கொண்டிருப்பதாகவும் டெய்லிமெயில் ஒரு செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

மலேயாவின் அழைப்புக்கு பெவின் மறுப்பு

சிங்கப்பூர், ஜன. 27— பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவினை மலாயாவுக்கு வருகை தரும்படி தான் அழைத்ததாகவும், அடுத்த மாதம் பிரிட்டனின் பொதுத் தேர்தல் நடைபெற விருப்பதால் அவர் வருவதற்கில்லை என்று கூறிவிட்டதாகவும் தென் கிழக்கு ஆசியா கமிஷனர் ஜெனரல் மால்கம் மாக்டொனல்டு இன்று தெரிவித்தார்.

நுவரேலியாவில் நடைபெறும் சர்வதேசத் தொழிற்சங்க மாநாட்டில் இலங்கைத் தொழில் மந்திரி தோழர் குணா தன் தலைமைப் பதவியை இந்தியப் பிரதிநிதி தோழர் எம். ஏ. மாண்டருக்கு அளித்தார்.

டர்பன் நூல் நிலையம்

இந்தியருக்குத் தடை

டர்பன், ஜன. 27— டர்பன் முனிசிபாலிடியின் லைப்ரரியை இந்தியர்கள் உபயோகிக்கக்கூடாது என்று தீர்மானக் கட்டத்தை கேட்டால் இந்திய சர்க்கார் ஸ்தானீகர் ஆட்சேபித்து, இத்தடையை 16-ம் தேதிக்குள் எடுத்துவிடாவிட்டால் தடை மீறப்படும் என்று இறுதி எச்சரிக்கை அனுப்பியதும் தெரிந்திருக்கும்.

இந்த எச்சரிக்கைக்குப்பின் முனிசிபாலிட்டியின் கமிட்டி கூடவே இல்லை. இப்பொழுதுதான் அக்கமிட்டி கூடி வெள்ளை தோல் இல்லாதவர்களுக்கு சாரும் லைப்ரரி தனியாக ஏற்படுத்தினால் என்ன என்று கேட்டிருக்கிறது.

இத்தாலிக்கு மூன்று கட்சிக் கலப்பு மந்திரிசபை

இத்தாலியின் புது மந்திரி சபையில் மூன்று கட்சிகள் இடம் பெற்றிருக்கும் என்று தெரிகிறது. இக்கட்சிகள் கத்தோலிக்கர்கள் சோஷலிஸ்டுகள் ரிபப்ளிக் கட்சியினர் ஆகியவையாகும். இந்தக் கலப்பு மந்திரிசபையின் மாபெரும் அரசின் வெற்றியாகும்.

இதோ, இரண்டாவது 'மகாத்மா'!

—(0)—

பிரிட்டிஷ்பத்திரிகை அறிமுகப்படுத்துகிறது!

லண்டன், ஜன. 27— காந்தியாருக்கு அடுத்தப்படி மதிப்பிற்குரிய வரும், இந்தியாவில் எல்லாருடைய அன்பிற்குப் பாத்திரமானவரும் பாபுராஜேந்திர பிரசாத் தான் என்றும், அவர் இந்தியாவின் முதல் தலைவராக வருவது மிகவும் பொருத்தமே என்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பாராட்டி எழுதுகின்றன.

மாஞ்செஸ்டர் கார்டியனில் அதன் டில்லி நிருபர் எழுதியிருப்பதாவது:-

ராஜன் பாபு காந்தியாரின் குணங்கள் அமையப்பெற்றவர். சகலபேர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர். அன்பின் அணிகலம். பரிசுத்த தன்மை, லட்சியத்தை நிறைவேற்றும் உறுதி இவைகள் மட்டுமின்றி நல்ல நிர்வாகத் திறமையும் உள்ளவர். பீகார் பூகம்ப நிவாரண சமயத்தில் அவர் செய்த சேவையும் நிர்வாகத்திறமையும் சரித்திரப்பிரசித்தி பெற்றது.

'பிச்சர் போஸ்ட்' பத்திரிகை ராஜன் பாபுவைக் குறித்து எழுதுகையில் மகாத்மாவின் அருங்குணங்கள் அமையப்பெற்ற இவர் இந்தியக் குடியரசின் முதல் தலைவராக ஏற்பட்டது மிகவும் பொருத்தமானது என்று எழுதியிருக்கிறது.

மனித 'கிளாண்ட்'களில் ஆராய்ச்சி

கனடா விஞ்ஞானியான ஹான்ஸ் ஸெல்யே என்பவர் மனித கிளாண்டுகள் விஷயமாக ஆராய்ச்சி செய்து பல அபூர்வ விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார். இதற்காக அவருக்கு நோபல் பரிசு கிடைக்கலாம்.

- குளோப்

மாலை மணி

சென்னை 28—1—50 சனிக்கிழமை

கோவை மாநாடு

திராவிடத்தின் விடுதலைக் காக்கப் போரிட, படை வீரர் பட்டியலிலே தங்கள் பெயர்களைப் பொறித்துக்கொண்டு, கொங்கு மண்டலத்திலே வேங்கைகள் என உலவிடும் வீரர்கள், சனியூரில் அமையும் பாசறையில், இத்திங்கள் 29ம் நாள் கூடுகின்றனர் என்ற செய்தி, கோவை மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி, மற்றையோர்க்கும் பெரும் மகிழ்வைத் தருவதாகும்.

கொங்கு மண்டலம் வீரத்திற்கும், பெருந்தன்மைக்கும், உழைப்புக்கும் பெயர் போன மக்கள் பலரையும் கொண்டதாகும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு முழு ஆதரவும், கோவை மாவட்டத்திலேதான் கிடைத்திருக்கின்றது என்றல், அது மிகையாகாது. காரணம், உண்மை உழைப்பும், பெருந்தன்மையும் முன்னேற்றக் கழகத்திடமே இருக்கக் கண்டவுடன், அதனையே ஆதரிக்கக் கோவை மாவட்டத்திலுள்ள திராவிட இயக்கப்பற்றுள்ள தோழர்களனைவரும் முன் வந்தனர். பலகாலம் போற்றப்பட்டு வந்த தலைவர் தம் மாவட்டத்தைச் சேர்ந்த தம்மில் ஒருவர் என்ற நிலை இருந்தபோதிலும் கட்சிக்கும், கொள்கைக்கும், நாட்டிற்கும் தவறிழைத்து விட்டார் என்று கண்ட பொழுது, உண்மைக்குப் பரிந்து நிற்க வேண்டும் என்ற ஒரே கொள்கையினால், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த இயக்கப் பற்றுடையவர்கள் அனைவரும் ஒரு முகமாக நின்று, உண்மையும், உழைப்பும், உணர்ச்சியும், கொள்கையுறுதியும் தேங்கிக்கிடந்த முகாமில் இணைந்து நின்று, திராவிடமுன்னேற்றக் கழகம் அமைய பெரிதும் துணையாக நின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பல கிளைகளை மாவட்டம் எங்கும் தோன்றச் செய்து, முழு வலிவையும் முன்னேற்றக் கழகத்திற்கே கொடுத்துவரும் மாவட்டமாகக் கோவைமாவட்டம் இலங்குகின்ற காரணத்தால்தான், சனியூர் மாநாடு கழகத்திற்கு உறுதி பயக்கும் ஒரு மாநாடாக விளங்கும் என்கிறோம்.

"இந்தியக் குடியரசு" தோன்றுவதற்கு முன்னால் கூடிய சென்னை மாநாடு எவ்வளவு முக்கியமானதொரு மாநாடாகக் கருதப்பட்டதோ, அதுபோலவே "குடியரசு நாளு"க்குப் பிறகு கூடும் சனியூர் மாநாடும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகிறது. "இந்தியக் குடியரசு நாளை"ப்பற்றி என்ன கருதுவது என்பதற்குச் சென்னை மாநாடு உதவியது போல, இனி நாம் என்ன திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்; என்பதை அறுதியிடுவதற்குக் சனியூர் மாநாடு பேருதவியாக இருக்கும் என்று கருதுகிறோம்.

மாநாட்டைக்கூட்டிக்காட்டுவதற்கு முக்கிய பங்கு எடுத்துக் கொண்டுள்ள தோழர்களின் பெயர்ப்பட்டியலைக் காணும்போது கோவைமாநாடு எல்லாவகையிலும், சீருடனும் சிறப்புடனும் இனிது நடந்தேறும் என்று துணிந்துகொள்வதற்கு இடமேற்படுகிறது.

கொங்கு நாட்டின் மறக்குடியினர்மரபிலேதோன்றி, நாடாண்டவரின் வழியில் வந்து, கழகக் கொள்கைகளில் பற்றுக் கொண்டு, அக்கொள்கைகளை நாட்டிலே, குறிப்பாகக் கொங்குமண்டலத்திலேபரப்ப அரும்பாடுபட்டு மறைந்த மாவீரன் அர்ச்சுனன் பெயர் பொறிக்கப்பட்ட பந்தலில், மாநாட்டினர் கூடுவது மிக மிகப் பொருத்தமான போற்றுதற்குரிய செயலாகும். அர்ச்சுனன் கொண்டிருந்த மனப்பண்பும், கொள்கைப்பற்றும், அவர்பெயரின் நிழலிலேகூடும் தோழர்கள் அனைவருக்கும், ஏற்படும் மாநாட்டின் நாளிலே என்று உறுதியாக நம்புகிறோம்; அவர் பெயரின் உச்சரிப்பு புதியதோர் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் என்பதிலும் ஐயமில்லை.

மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திருவண்ணாமலைத் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் ஆண்டில் இளைஞராயினும், ஆட்சித் திறமையில் மிக்குயர்ந்த நற்பண்பு பெற்றவராவார். அதோடல்லாமல், நீங்காக் கொள்கைப்பற்றும், தளரா மனவளமும் படைத்தவர், நாட்டிற்கு நற்றொண்டு மேலும் மேலும் புரிய வேண்டும் என்ற அவாவுணர்ச்சியால் தூண்டப்பட்டு எழுச்சி கொண்டு விளங்கும் அவர் மாநாட்டிற்குத் தலைமை வகிப்பது சாலச்சிறந்தவொரு செயலாகும்.

மாநாட்டைத் துவக்கி வைக்க அழைக்கப்பட்டிருக்கும் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள், உடலமைப்பு போன்றே உள்ள அமைப்பும் வாய்க்கப் பெற்று, மலை குலையினும்தான் மனங்கலங்கா மாண்புடையவராகத் திகழும் வீரர்களுள் ஒருவர் ஆவார். அவர் ஒரு பெரு நிலக்கிழவர். பெரும்பாலான பெரு நிலக்கிழவர்களுக்கு மகிழ்ச்சிதரும் பொருள்களாக விளங்குவன மது, மங்கை, மயக்கமொழி இவை போன்றவைகளாகவே இருக்கும்; வேறு துறையிலே மகிழ்ச்சியைப்பெற அவர்களுக்கு மன மிருப்பதில்லை; ஆனால் தோழர் சோமசுந்தரம் அவர்களுக்கு மகிழ்ச்சி கொடுப்பது இயக்கத் தொண்டர்களின் இன்முகம் தவிர வேறொன்றாக இருப்பதில்லை. கொங்கு நாட்டு வேங்கை என உலவிக் கொண்டிருக்கும் அவர் மாநாட்டைத் துவக்கி வைப்பது யாவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக, முன்னணியில் வீரராக இருந்து அருஞ் செயலாற்றிய பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி வரவேற்புக் கழகத் தலைவராக இருந்து மாநாட்டினரனைவரையும் வரவேற்கிறார் என்றால், மாநாட்டின் சிறப்பைச்சொல்லவும் வேண்டுமோ?

சொற்பொழிவாளர் பலரும் கலந்துகொள்ளச் சம்மதித்திருக்கும், சனியூர் மாநாடு வெற்றியுடன் நடைபெறும் என்பது திண்ணம். வெல்க திராவிடம்! வெல்க சனியூர் மாநாடு! என்று நாம் இந்தச் சந்தர்ப்பத்தில்வாழ்த்துகிறோம்.

காஷ்மீருக்கருகில் சீன கம்யூனிஸ்டு படைகள்

லண்டன், ஜன. 26—
காஷ்மீருக் கருகிலுள்ள கோடான் என்ற இடத்தை பெங் தலைமையிலுள்ள சீன கம்யூனிஸ்டு துருப்புக்கள் அடைந்து விட்டன என்று தெரிவதாக 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகை கூறுகிறது.

பார்மோஸா படையெடுப்புக்கு ரஷ்யா உதவும்

பார்மோஸாவின் படையெடுப்புக்கு ரஷ்யா 50 டிவிஷன்களைக் கொடுத்துதவும் என்றும், விமான உதவியையும் அளிக்கும் என்று சீன தேசியவாதிகள் நம்புவதாகக் கூறப்படுகிறது.

பெர்லினுடன் போக்குவரத்துக்கு காலதாமதம்

ரஷ்யாதான் உத்தரவிட்டதாம்

பெர்லின், ஜன. 27—
பெர்லினுக்கும்மேற்குஜெர்மனிக்கும் போக்குவரத்து காலதாமதம் செய்யப்படுவது ரஷ்யாவிடமிருந்து கிடைத்த உத்தரவின்பேரிலேயே என்று மாரின்போர்னிலுள்ள கம்யூனிஸ்ட் ஜெர்மன் போலீஸார் முதல்தடவையாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சோதனை செய்து அனுப்பப்படும் இடத்தில் மணிக்கு 4 லாரிகள் மட்டுமேதான் அனுமதிக்க வேண்டும் என்பது ரஷ்ய உத்தரவாம்.

அறிவுக் கதிர்!

பிரம்பில்லாமல் பாடம் சொல்லித் தரும் வாத்தியார் உலகத்தில் ஆதி நாள் முதல் இருந்து வந்திருக்கிறார். அவர் சொல்லித் தருவதற்குச் சம்பளம் கிடையாது. நாம் அவரை நாடிப்போகும்பொழுது அவர் தூங்காமல் நமக்காகக் கண் விழித்திருப்பார். அவருடைய தயவு தேவையாக இருக்கும் சமயம் கண்மறைவாக ஒளியும் வழக்கமில்லை. என்ன தப்பு செய்தாலும் கடிந்து ஒரு வார்த்தை கூறமாட்டார். ஒன்றும் தெரியாத சுத்த அசமந்தமாக இருந்தாலும், அவனை பார்த்து இருப்பதில் இவர். இப்படிப்பட்ட தங்கமான வாத்தியார் ஒருவர் உண்டானால் அவரை எப்படி அலட்சியம் செய்யமுடியும்? அந்த வாத்தியார் வேறுயாருமில்லை சாக்ஷாத் புத்தகம் தான் அவர்.

— ரிச்சர்ட் டிப்யூரி

துறையூரில் குடியரசு "ஜனனம்"!

துறையூர், (திருச்சி) ஜன. 25—
இவ்வூர் திராவிடர் கழகத்தார் இன்று துக்கநாள் கொண்டாடுவதாக விளம்பரம் செய்திருந்ததினால் இவ்வூர் மாஜிஸ்ட்ரேட் "திராவிடர் கழகத்தார் இன்றிலிருந்து 15 நாட்கள் எவ்வித ஊர்வலங்களோ, பொதுக் கூட்டங்களோ நடத்தக் கூடாது" என 144 உத்தரவு போட்டு அதில் 17-பேர்களைக் குறிப்பிட்டு அவர்களை அழைத்து கையெழுத்திட்டு உத்திரவைப் பெற்றுக்கொள்ளச் சொன்னார். அவர்களில் தி. மு. கழகச் செயலாளரான டி. பி. அழகமுத்து அவர்களின் பெயரும் சேர்க்கப்பட்டிருந்தது. தோழர் அழகமுத்தை அழைத்திருந்ததினால் அவர் சென்று, தான் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் என்றும் இவ்வுத்திரவு திராவிடர் கழகத்திற்குதான் போடப்பட்டுள்ளது என்றும், அதனால் பெற்றுக் கொள்ள முடியாதென்றும் கூறினார். அதற்கு சப் இன்ஸ்பெக்டர், திராவிடர் கழகம் என்று குறிப்பிடுவது, திராவிட முன்னேற்றக் கழகத்தையும், குடியரசு விழாவை ஆதரிக்காத எல்லோரையும்தான்" என்று கூறினார். பிறகு, அவர் "திராவிட முன்னேற்றக் கழகம் என்ற முகவரியிட்டுத் தருவதானால் உத்தரவைப் பெற்றுக்கொள்ளுகிறேன்" என்று கூறினார். அம்மாதிரியே சப் இன்ஸ்பெக்டர் "செயலாளர் திராவிட முன்னேற்றக் கழகம் என்று போட்டுக் கொடுக்கவே, அதைத் தோழர் அழகமுத்து பெற்றுக்கொண்டார். (ந-நி)

போளூரிலும் 'பூரண' குடியரசு!

போளூர், ஜன 26—
இவ்வூர் பழய பஸ்டாண்டில் பறந்து கொண்டிருந்த நமது தி. மு. க. கொடியை, திருவண்ணாமலை டிப்டி போலிஸ் சூபரெண்ட் அவர்கள் நேற்று காலை தமது ஆட்களைக் கொண்டு இறக்கிவிட்டார், பின்பு இவ்வூர் தி. மு. க செயலாளரை அழைத்து "நாளைக்கு உங்கள் கொடி பறக்கக்கூடாது இந்தக் கொடியைப் போலிஸ் ஸ்டேஷனில் கொடுத்து விட்டுப் போகிறேன். இரண்டு நாள் பொறுத்து அங்கு போய் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

நேற்று (25—1—50) இரவு திடீரென ஏற்பட்ட கம்யூனிஸ்ட் கொடிகள் மட்டும் ஊரில் பல இடங்களில் பறந்தகொண்டிருந்தன. உதவி போலிஸ் சூபரெண்ட் அவர்களிடம் இவ்வூர் பிரபல காங்கிரஸ்காரர் தோழர் ஸ்ரீபதி ராவ் (பார்ப்பனர்) முறையிட்டதின்பேரில்தான், அந்தக் கொடிகள் இறக்கப்பட்டனவென்று மக்கள் பேசிக்கொள்கின்றனர். (ந. நி.)

சோமாலிலாந்து நிர்வாகம்

ரோம், ஜன 26—
சோமாலிலாந்தின் நிர்வாகத்தை ஏற்க நேபிள்ஸிலிருந்து 4000 இத்தாலியத் துருப்புகள் புறப்படவிருக்கின்றன ஆனால் இதற்குப் புது சர்க்காரின் பார்லிமெண்டரி அங்கீகாரம் வேண்டும்.

இத்தாலியப் பிரதமர் கேஸ்பிரி குடியரசு வாதிகளுக்கும், சோஷலிஸ்டுகளுக்கும் திருப்தியளிக்கும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவிக்கிறார். சோமாலிலாந்திலுள்ள ஆபிரிக்கனைக்கான பிரிட்டிஷ் துருப்புகள் புறப்பட்டு போவதற்கு தேதியை நிர்ணயிக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன.

'சுதேசமித்திரன்' நிருபரின் சரடு!

உண்மையைத் திரிக்கும் 'சின்ன புத்தி'!

'சுதேசமித்திரன்' 25—1—50-ந் தேதி உள்ளூர்ப் பதிப்பு 4-வது பக்கம் 4-வது காலத்தில் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு பற்றி வெளியிடப்பெற்றிருக்கும் அரைக்கால் பத்திச் செய்தியொன்றில், உண்மையைத் திரித்துக் கூறும் 'உபாயம்' ஒன்று இயல்பான வஞ்சகமுறையில் கையாளப்பட்டிருக்கிறது.

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பற்றிக் குறிப்பிடவரும் நிருபர், ஒரு தீர்மானத்தை அப்படியே தலைகீழாக மாற்றி 'சாணக்கிய' வேலை செய்துள்ளார். மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற பல்வேறு தீர்மானங்களுள், 'சென்னை மாகாணத்தைத் தனி மாகாணமாக்குதல் கூடாது' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க,

'சென்னை மாகாணத்தைத் தனி மாகாணமாக்க வேண்டுமென்று' தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கயிறு திரித்திருக்கிறார். நிருபர் தலைநகரில் நடந்ததொரு குறிப்பிடத்தக்கப் பெரும் மாநாடொன்றில் நிறைவேற்றப்பட்ட இன்றியமையாத் தீர்மானமொன்றை, தலைநகரிலேயேயுள்ள பிரபல பத்திரிகையொன்று இவ்வண்ணம் இருட்டடிப்புச்செய்ததோடு, இல்லாததைச் சாற்றுகிறதென்றால் இதில் நியாயமோ, பொறுப்போ, நேர்மையோ இருக்கமுடியுமாவென்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம்.

அமெரிக்க ஆராய்ச்சியாளருக்கு ஏமனில் அனுமதியில்லை

அமெரிக்க புதை பொருள் ஆராய்ச்சிக் குழு ஒன்றை ஏமன் அனுமதிக்காது என்று குளோப் நிருபர் கூறுகிறார்: அப்படி குழு வரும் பட்சத்தில் யுனைடெட் ஏமன் நல்லுறவு பாதிக்கப்படும் என்று ஏமன் சார்பில் எச்சரிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புதுடெல்லி, ஜன. 26—
சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் விந்திய பிரதேசத்தில் சாட்னு என்ற இடத்தில் பிப்ரவரி 23, 24 தேதிகளில் நடைபெறவிருக்கிறது. கட்சியின் 8-வது ஆண்டு மாநாடு நடைபெறும் இடமும் தேதியும் இக்கூட்டத்தில் நிச்சயிக்கப்படும். இம்மாநாடு சென்னையில் ஏப்ரல் மூன்றுவது வாரத்தில் நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

திருச்சி மாவட்ட கிளைக்கழக தோழர்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழக சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்படவேண்டிய அளவுக்குத் திருச்சி மாவட்ட மாநாட்டைத் திறம்பட நடத்திய தோழர்களே!

31—12—49ல் திருச்சியில் கூடிய மாவட்டப் பொதுக்குழுக் கூட்ட முடிவுப்படி 31—3—'50க்குள் நமது மாவட்டத்தில் 10,000 (பத்தாயிரம்) உறுப்பினர்களையும், குறைந்தது 100 (நூறு) கிளைக் கழகங்களையும் ஏற்படுத்தி ஏனைய மாவட்டத்திற்கு முதல் வரிசையில் நம் மாவட்டம் இருக்குமாறுசெய்ய கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் சேர்க்கும் புத்தகம் பெற்றுச்சென்ற தோழர்கள் உடனடியாகச் சேர்ப்பதுடன், சேர்த்த சீட்டுகளை, தலைமை நிலையத்திற்கும், மாவட்டக் கழகத்திற்கும் அனுப்பவேண்டியவைகளையும் அதற்கான தொகையையும் மாவட்டகழகச் செயலாளர் மூலமாக அனுப்பக்கோருகிறேன்.

ஜி. பராங்குசம்
துணைச்செயலாளர்

வீட்டுக்கு வீடு சுவர்; நாட்டுக்கு நாடு எல்லை!

மணிமுடியணிந்து மங்காப் புகழ்கொண்டது தமிழ்க்குடி

திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைத் தட்டிக் கழித்துவிட முடியாது

சென்னை மாநாட்டில் தோழர் அண்ணாத்துரை

(நேற்றையத் தொடர்ச்சி)

ஐரோப்பாவிலே பிரான்ஸ் இருக்கிறது; ஸ்பெயின் இருக்கிறது; போர்சுகீஸ் இருக்கிறது; லாட்வியா, லிதுவேனியா, கிரீஸ், அல்பேனியா, இதாலி இருக்கின்றன. இவைகளெல்லாம் தனிநாடுகளாக இருக்கும்பொழுது இன்பத் திராவிடம் மட்டும் ஏன் தனி நாடாக இருக்க முடியாதா என்ன? ஐரோப்பாவிலே இருக்கும் சிறு சிறு நாடுகளெல்லாம் திராவிட நாட்டை விட விஸ்தீரணத்தில் பெரியதா? நம்மை நாம் காத்துக் கொள்ள திராவிடநாடு நமக்கு அவசியம் தேவை. மற்ற நாடுகளை விட திராவிட நாடு விஸ்தீரணத்தில் பெரியது. நிலவளம், நீர்வளம், மலைவளம், மனவளம் எல்லாம் திராவிடநாட்டிலே காணலாம். இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ உள்ளன. கவனிப்பாரற்று. வளமான திராவிட நாடு அதில் வளைந்து வளைந்து செல்லும் வாய்க்கால்கள், வாய்க்கால்களுக்கு பக்கத்தில் வயல்கள், வயல்களிலே உழவர்கள் சிந்தைகளிப்புடன் பாடும் சிந்து வயல்களுக்கு பக்கத்தில் சாலைகள் சாலைகளுக்குப் பக்கத்திலே கிளி கொஞ்சிடும் சோலைகளைக் காண்கிறோம். சோலைக்கும் மற்றொரு பக்கத்திலே செவ்விளநீரைக் காண்கிறோம், அதுமட்டுமா? சாலைகளுக்குப் பக்கத்திலே குன்றுகள், கடலுக்குள்ளே முத்து, காட்டிலே வாசனைவீசும் சந்தனம், கஸ்தூரி வகைகள், அழகிய மரம் இன்னும் எவ்வளவோ பொருள்கள் கிடைக்கின்றன. இன்பத்திராவிடத்திலே இன்பத் தேன்வந்து பாய்கிறது. உதாரணமாக பிரான்சிலே நிலக்கரி கிடைத்தால் பெட்ரோல் கிடைக்காது. இங்கிலாந்திலே நிலக்கரி கிடைத்தால் தங்கம் கிடைக்காது. ஜெர்மனியில் இரும்பு கிடைத்தால் யூரேனியம் கிடைக்காது ஐரோப்பாவிலே உள்ள தனி நாடுகளிலே இங்கு கிடைப்பதுபோல எதுவும் கிடைக்காது.

புதை பொருள் ஆராய்ச்சி

இங்கு மண்ணுக்கடியில் பொன், தங்கம், நிலக்கரி. அது மட்டுமா? நம்மைக் கண்டு அமெரிக்கா அச்சப்படும் அளவுக்கு திருவாங்கூர் பகுதியிலே அணுகுண்டு தயாரிப்பதற்கு அவசியம் தேவையான யுரேனியம் கிடைக்கிறது. கருத்தோடு தோண்டினுல் கிடைப்பதற்கு அரிய பொருள்கள் எல்லாம் கிடைக்கத்தான் செய்யும். தோண்டுவதற்குசோம்பேறித்தனம். தோண்டினுல் எவ்வளவோ பலன் கிடைக்கும். தேவையுள்ள பொருள்களுக்காக அரசாங்கத்தார் கவனம் செலுத்தித் தோண்டிப்பார்ப்பதில்லை. புதைபொருள் ஆராய்ச்சி இலாகா என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் தோண்டிப்பார்த்து கண்டு பிடித்தது என்னதெரியுமா? பஞ்சமகாலிங்கம், இடது காலைத் தூக்கிஆடும் நடராஜர் மனைவியுடன் கூடிய பிள்ளையார். இப்படித்தான் இவர்கள் கண்டுபிடித்திருக்கிறுர்கள். இதற்குத் தலைவர்தோழர் இராமச்சந்திர தீட்சிதர். நாடு நலம்பட வழியா இது?

குறள் கருத்து ஒன்று இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது. அதாவது பாடுபட்டும்பட்டமனிக்கிடப்பதைப் பார்த்து நிலமங்கை நகைக்கிறுள் என்பதாகும். ஏ மனிதனே! டாடா கம்பெனியில் தயாராகிற ஆணியை அடித்து, ஜெர்மனியிலே அச்சானசரஸ்வதி படத்தை மாட்டி, ஜப்பான்அனுப்புகிற கற்பூரத்தை கொளுத்தி அழகு பார்க்கும் பைத்தியக்காரா? இங்கே இயற்கை எழில் நிரம்பியிருக்க இங்கேயே எல்லாம் கிடைக்கும் பொழுது, எல்லாவற்றிற்கும் மேல் நாட்டை எதிர்பார்க்கிற தமிழனே! நீ நாட்டை ஆளமுடியுமா! என்று தமிழனைப் பார்த்து நிலமங்கை நகைக்கிறுள்.

கை போனுல் கண் உண்டு

வஞ்சகத்தாலே, சூதாலே வடநாட்டார் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தியிருக்கலாம். வாள் எடுத்தவன் தமிழன் தான் பணியத்தான் வேண்டும். நாங்கள் எங்கள் கட்டை விரலை வெட்டிப் போடுகிற வரையில் எழுதிக்கொண்டேதானிருப்போம். நாக்கின் நுனியை நறுக்கிப் போடுகிற வரை பேசிக்கொண்டேயிருப்போம் கட்ட விரலையும் நாக்கையும் வெட்டிப் போட்டாலும், வாயைவிட கண் அழகாகப் பேசுமே! பேசாமலா போகும்?

நேருவை கேட்கிறோம்

ஒரு பிச்சைக்காரன் நடந்து செல்கிறான். மற்றொருவன் மெருகு கலையாத மோட்டார் காரில் செல்லுகிறுன். அப்பொழுது பிச்சைக்காரனின் மீது உங்கள் கண்ணோட்டத்தை விட்டால், பிச்சைக்காரனின்கண்கள்அவனுடைய வறுமையைப் பற்றி நன்றாகப் பேசுவதைக் காணலாமே! நம்முடைய நோக்கத்தின்படி நமக்கு வசதி செய்து திராவிட நாட்டைத் தனியே தரும்படி கேட்கிறோம். யாரை? நேருவைக் கேட்கிறோம்! உலக சரித்திரம் தெரிந்த நேருவைக் கேட்கிறோம்! பூகோளம் அறிந்த நேருவைக் கேட்கிறோம்! திராவிடநாடு தனியாக இருந்தால் ஆபத்து வராதா? என்று கேட்கலாம். திராவிட நாடு தனி அரசாக-தனிநாடாக இருக்கும் பொழுது ஆபத்து வந்தால் அதைத் தடுக்கஏன் இயலாது?

நாங்கள் போர்வீரர்கள்

சைனாவுக்கு ஆபத்துவரும் பொழுது நேரு சர்க்கார் உதவவில்லையா? சீன நாள் கொண்டாடவில்லையா? ஸ்பெயின் நாள் கொண்டாடவில்லையா? காஷ்மீர் போராட்டத்திலே இரத்தம் சிந்திய மாவீரர்கள் யார்? பெரும்பாலான திராவிடவாலிபர்கள்தானே. காஷ்மீரில் இரத்தம் சிந்தியிருக்கிறுர்கள். தமிழ்நாட்டுப்போர் வீரர்கள்தான், போரென்றுல் முன்னணியில் நின்று உயிரைத் தருபவர்கள். ஹோம்ரூல் சண்டை நடந்த பொழுது தமிழ்நாட்டுப்போர் வீரர்கள் தான் முன்னணியில் நின்றுர்கள். நைல்நதிக்கரையிலே, எகிப்திலே, பிரான்சிலே ஜெர்மனியிலே யெல்லாம் போர் நடந்தபொழுது தமிழ்நாட்டு வீரர்கள் தான் இரத்தத்தைச் சிந்தியிருக்கிறுர்கள். நாங்கள் விரும்பினுல் ஒரு பெரிய போர்ப்படையை அமைக்கலாமே! வெளிநாடுகளுக்கெல்லாம் சென்றுதிரும்பியிருக்கும் போர் வீரர்களை ஒருங்கு சேர்த்து ஒரு பட்டாளத்தை அமைக்க எங்களால் முடியாதா? ஏன் முடியாமல் போய்விடும்?

கப்பல் கட்டி வாழ்வோம்

நாங்கள் விரும்பினுல் எங்கள் நாட்டிலே ஒரு I. N. O. U. N. O வைப்போல ஒன்று அமைக்க முடியாதா, என்ன?

பெருங்காற்று அடிக்கும் பொழுது காட்டிலே உள்ள நல்லமரங்களெல்லாம் 'என்னை என்றும் மரமாகவே வைத்திருக்கிறீர்களே! தயை செய்து எங்களைப் பயன்படுத்தி, அழகிய கப்பலைக் கட்டி விட்டால் அலைகடலிலே உல்லாசமாக மிதந்து செல்வோமே' என்று நம்மைப்பார்த்துக்கேட்கிறது நாங்கள் விரும்பினுல் அழகிய கப்பலைக் கட்ட முடியாதா என்ன? கலிங்கத்துப் பரணியிலே வீரத்துக்குச் சான்று சொல்ல வேண்டும்? கலிங்கத்துப் பரணியிலே தமிழனின் வீரப்பணி நன்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. கடினமான பிரதேசத்தைக் கைப்பற்ற, வேழத்தை அனுப்பிக் கைப்பற்றியதாக கலிங்கத்துப் பரணி கூறுகிறது. வேதங்களையோ, வேதியர்களையோ அனுப்பவில்லை!

தமிழ் மன்னர்களின் தலையிலே மணிமுடி இருந்த பொழுது திராவிட நாடு மங்காது இருந்தது. போலிக் காரணங்களைச் சொல்லி, திராவிட நாட்டைப் பிரிக்காமல் இருக்க முடியாது.

வீட்டுக்குச் சுவர்; நாட்டுக்கு அரண்

வீட்டுக்கு வீடு சுவர், ஆற்றுக்கு ஆறு அணை, அமைத்திருப்பது பாகப் பிரிவினையால் அல்லவா. வீட்டுக்கு வீடு சுவர் தேவைப்படுகிறது அண்டை வீட்டுக்காரனுக்கு மத்தியிலே கதவிருந்தாலும், இரவிலே நெடுநேரமானதும் அண்டை வீட்டுக்காரன் நாம் படுக்கைக்குப் போகும் பொழுது ஏதாவது பேசினுல், எல்லாம் நாளைகாலை பேசிக் கொள்ளலாமப்பா என்று சொல்லிக்கொண்டே கதவைத் தாளிட்டு விடுவதை நீங்கள் காணவில்லையா? வீட்டுக்கு வீடு சுவர் அவசியம் தேவைப்படுகிறபோது, நாட்டுக்குநாடு எல்லையிருந்தால் அதில் தப்பென்ன? என்று கேட்கிறேன்.

வயலுக்கு வயல் வரம்பில்லையா? ஆகாய விமானத்தில் உயரப் பறக்கும்பொழுது ஒரே பச்சைப் பட்டாடை போலத் தெரியும் வயல்களையெல்லாம்பார்த்து, இவைகளையெல்லாம் எங்களுக்கு ஒன்றாகத்தான் தெரிகிறது. இஷ்டப்பட்டவர்கள் அறுவடை செய்துகொள்ளலாம் என்று சொல்லிவிட முடியுமா?

பலாத்காரமின்றி பலன் காண்போம்

ஒருவரப்பிலிருந்துமற்றொரு வரப்புக்குச் சென்று அறுவடை செய்தால், தடை செய்ய அரசாங்கத்தாரின் சட்டம் இருக்கிறது. இல்லையேல் அரிவாள் இருக்கிறது நாம் பலாத்காரமற்றத் தன்மையில் திராவிட நாட்டைத்தரும்படி கேட்கிறோம்.

இன்று இரவு நாடகமிருப்பதாலும் அரசியல் அதிகாரம் மட்டுமின்றி சமுதாய விஷயம்பற்றியும் நடகத்தில் நான் பேசவேண்டியிருப்பதாலும் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

கொடி ஏற்றுவோம்!

(புதுவைச் சிவம்)

(விடுதலை விடுதலை விடுதலை என்ற மெட்டு)

ஏற்றுவோம்! ஏற்றுவோம்! ஏற்றுவோம்!

ஆற்றல் மிக்க திராவிடத்தின்
ஆட்சிகாண வேண்டியே
போற்றும் செம்மை கருமை வாய்ந்த
பொற்கொடியை வானிலே (ஏ)

வடவர் நம்மை ஏய்த்து வாழும்
வஞ்சமெல்லாம் வீழவே
திடமாய் ஒன்று சேர்ந்தெல்லோரும்
திராவிடக் கொடி வானிலே (ஏ)

சாதி பேதக் கொடுமை வீழ்த்திச்
சமத்துவம் நிலை நாட்டியே
பூதலத்தில் அறிஞர் போற்றும்
புதிய வாழ்வு காணவே (ஏ)

வறுமை கொண்டு துன்ப வாழ்வில்
வாடும் ஏழை மக்களின்
சிறுமை தீர்த்துச் சமதர்மத்தின்
செம்மை வாழ்வு காணவே (ஏ)

இன்ப துன்பம் சகலருக்கும்
என்ற நிலை வாய்ந்திடக்
குன்று வளமைத் திராவிடத்தின்
கொடி உயர்த்தி வானிலே (ஏ)

வெஸ்டர்லிங்கை கைது செய்ய உத்தரவு

லண்டன் ஜன. 26—

இந்தோனேஷ்யாவில் கலகம் செய்யும் வெஸ்டர்லிங்கைக் கைது செய்ய பிரதமர் ஹட்டா உத்தரவு பிறப்பித்திருக்கிறுர் என்றும், 'தாருல் இஸ்லாம்' என்ற மதவெறி இயக்கத் தலைவனின் நேரிலேயே வெஸ்டர் லின் இரத்தாக்குதலை ஆரம்பித்திருக்க வேண்டுமென்றும், அவனுடன் சர் யூனிஸ்லோனும் சேர்ந்திருக்கின்றனர் என்றும் 'கிளாஸ்கோ ஹெரால்ட்' பத்திரிகை கூறுகிறது. இந்தோனேஷ்யாவில் அமைதியை நிலைநாட்டவேண்டியது முக்கியமான காரியமென்றும், இதற்கு இந்தோனேஷ்யப் படைகளுடன் டச்சு ஒத்துழைக்கும் எனவும் அப்பத்திரிகை கூறுகிறது.

இந்தியாவுக்கு ஏராள சைகிள் ஏற்றுமதி

லண்டன், ஜன. 26—

பிரிட்டனிலிருந்து சென்ற வருண்டு சைகிள்கள், மோட்டார் சைகிள்களை அதிகமாக இறக்குமதி செய்திருக்கும் நாடு இந்தியா என்பது மோட்டார் உற்பத்தியாளர் வியாபாரிகள் சங்க யூனியன் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருகிறது. 1949ல் 2276777 பவுன் மதிப்புள்ள 350776 சைகிள்களும், 191372 பவுன் மதிப்புள்ள மோட்டார் சைகிள்களும் இந்தியாவினுல் வாங்கப்பட்டிருக்கிறது.

துருக்கி பொதுத் தேர்தல்

கெய்ரோ, ஜன. 26—

துருக்கியில் பொதுத் தேர்தல் மே 23-ந் தேதி நடைபெறவிருக்கிறதென்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் 150,000 வாக்காளர்கள் குறைந்த பட்சம் இருக்க வேண்டுமென்று சட்டத்தில் திருத்தப்பட்டிருக்கிறது

கூட்டு முயற்சியால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சியில், திருச்சி மாவட்ட மாநாடு நடைபெற்ற பிறகு தான், நம்முடைய சென்ற மூன்று மாதத்திய பணி எவ்வளவு பயன் தந்திருக்கிறது என்பது உணரக்கிடைக்க முடிந்தது. இந்த மூன்று திங்களில் நாம் செய்த வேலைகளுக்காக நாம் பெருமைப்பட, பலப்பல இருக்கின்றன என்றாலும், நம் எதிரில் வேலைகள் இன்னமும் மலை போல் குவிந்திருக்கின்றன என்பதை எண்ணுந்தோறும் செய்தவை மிகச் சில, செய்ய வேண்டியவை மிகப் பல என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. ஆகவே அந்த மிகப் பெரிய வேலைகளுக்கு, மத்திய கழகம் வகுத்துக் கொடுக்கும் திட்டங்களை, உடனுக்குடன் நிறைவேற்றி, கழகத்தின் ஆக்க வேலைகளைத் துரிதப்படுத்த கழகத்தைச் சார்ந்த அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கழகத் தோழர்கள் கடமை

இன்று நமது கழகத்தின் பொதுச் செயலாளராக இருக்கும் தோழர் அண்ணாத்துரை அவர்கள், நீண்ட காட்களாகவே இயக்கத்தின் பொதுச் செயலாளராகத்தான் இருந்து வந்திருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்பெல்லாம் செயலாளரின் வேலை அவரிடம் கொடுக்கப்படவில்லை. எல்லாப் பொறுப்பையும் தலைவர் அவர்கள் தாமே வலிந்து எடுத்துக் கொண்டு தம் இஷ்டப்படி செயலாற்றுவார். தோழர் அண்ணாத்துரை அவர்களிடம் பொறுப்பைக் கொடுக்காமல் குறைகூறக்கூடாது என்று பெரியாரிடம் நான் கூறுவது உண்டு. "உனக்கு இதுதான் தெரியுமே யொழிய, மற்றவர்கள் எப்படியிருக்கவேண்டும், அவர்களை எப்படி வைக்க வேண்டும் என்பது உனக்குத் தெரியாது" என்றுதான் பதில் கூறிவந்தார் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பட்ட பிறகு அண்ணா அவர்கள் பல இடங்களுக்கும் சென்று வருகிறார்கள்; வேலை செய்து வருகிறார். கழகத்தில் கூட்டு முயற்சி ஏற்படும் போது எல்லாம் சரியாக நடக்கும் என்பது இதன் மூலம் நன்கு தெரிகிறது. சிற்றூர்க் கிளையிலிருந்து மத்திய கழகம் வரையிலுள்ள பல்வேறு நிலைகளும் ஒரு சங்கிலித் தொடர்போல் அமைந்து, கழகம் நன்கு வேலை செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது கழகத் தோழர்களின் முக்கிய கடமையாகும்.

முக்கியமானதோர் மாநாடு இது

நாம் இங்கு ஒரு நெருக்கடியான நிலையில கூடியிருக்கிறோம். இது வெறும் சம்பிரதாயத்துக்காகக் கூறப்படுவதல்ல. எல்லா மாநாடுகளிலும் கூறப்படுவதுதான். என்றாலும், உண்மையிலேயே நாம மிகமிக நெருக்கடியான நேரத்தில் கூடியிருக்கிறோம். அந்த நிலையில் நின்று பார்க்கும் போது, சென்னை மாநாடு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும்.

சென்ற உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட சூழ்நிலை அடிமைப் படுத்தப்பட்ட நாடுகள் கைக்கொண்ட விடுதலைவேட்கை, அவைகளுக்காக அந்தந்த நாட்டு மக்கள் செய்த கிளர்ச்சிகள் இவைபோன்ற காரணங்களாலும், சென்ற இருநூறு ஆண்டுகளாகத் தங்களின் ராஜதந்திர பலம் ஒன்றையே பெரும் மூலதனமாக வைத்து ஆண்டுகொண்டிருந்த வெள்ளையர்களுக்குச் சென்ற போரின்போது ஏற்பட்ட விளைவுகள், ராஜதந்திரத்தின் செல்வாக்கிழந்த தன்மை, இந்த உபகண்டத்து மக்கள் இனியும் அன்னியனிடம் அடிமைப்பட்டிருப்பதில்லை என்று மேற்கொண்ட உறுதிப்பாடு ஆகிய இந்தக் காரணங்களாலும், இந்த உபகண்டம் வெள்ளையர் ஆட்சியினின்றும் மீண்டது. சென்ற 1947ல், விடுதலை கிடைத்தவுடன் இந்நாட்டின் பல்வேறு பக்கங்களில் நடந்த அமளிகள், அவைகளின் பயனாய் இதுவரை நாம் அனுபவித்துவரும் இன்னல் துன்பங்கள் ஆகியவை உங்கட்கு நினைவிருக்கும்.

இன்றைய சர்வதேச நிலை

சென்ற போருக்குப் பிறகு உலகத்தில் இரு பெரும் சக்திகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு, ஒன்றை ஒன்று எப்படி அழிப்பது என்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அவை தாம் ஒன்று அமெரிக்கா, மற்றொன்று ரஷ்யா. அமெரிக்கா பண பலத்தால் உலகை எவ்வளவு நாளைக்குத்தான் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியும் என்ற கொடிய விஷப் பரீட்சையில் இறங்கியிருக்கிறது. மற்றொரு பக்கமுள்ள ரஷ்யா உலகில் மக்களனைவரும் இன்புற்றிருக்கத் தக்கத் திட்டங்களை வைத்துக்கொண்டு, எல்லா நாட்டு மக்களின் கவனத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கின்றது. ரஷ்யா தன்னுடைய முகாமில் இன்று பல நாடுகளை வைத்துக் கொண்டிருக்கிறது என்கிற எண்ணமே அமெரிக்கா, பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் சிந்தனையைக் கலக்கிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரஷ்யாவுக்கு எதிர்முகாமில் இந்தியாவை இணைந்திருக்கச் செய்ய பல வேலைகளும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளால் செய்யப்பட்டு வருகின்றன. அவைகளிலே ஒன்றுதான் அண்மையில் நடைபெற்ற இலங்கை காமன் வெல்த் மாநாடாகும். இந்தச் சிக்கலில் திராவிடநாடு உள்ளிட்ட இந்தியா பிணைக்கப் பட்டிருப்பதால்தான், நாம் மிக்கக் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சியாங்கின் நிலையை நினைவூட்டுகிறோம்

பக்கத்திலே உள்ள சீனாவும், இந்தொனேஷியா, இந்தோ சீனா, பர்மா போன்ற நாடுகளும், மக்கள் சக்தித் திரண்டெழுந்தால் என்ன ஆகும் என்ற நிலைமையை விளக்கி, இந்தியாவிற்குப் பாடங் கற்பித்து வருகின்றன. சீன நாட்டின் "தனித்த வருரா" விளங்கிய சியாங் இப்பொழுது மக்கள் சக்திக்கு என்ன ஆயிருக்கிறார், என்பதைச் சண்டிதநேரு அறிந்து கொண்டு அதன்படி நடப்பது நல்லது மக்களின் கோரிக்கைக்கு இடங்கொடாமல் நடந்துகொண்ட சியாங்கிற்கு ஏற்பட்ட கதியைக் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருக்க, இப்பொழுதே எச்சரிக்கையாக நடந்துகொள்வது நல்லது.

எத்தனை நாளைக்கு இந்த "தர்பார்"?

வெள்ளையனோடு இந்நாட்டின் பீடைகள் அனைத்தும் கப்பலேறி விட்டதாகக் கருதினர்-மக்கள் மட்டுமல்ல, மாபெருந் தலைவர்களும் கூட, அந்நேரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் மக்களுக்களித்த வாக்குறுதிகளும் ஒன்றும் தரத்தில் குறைந்தவையல்ல. நாங்கள் ஆட்சியில் அமர்ந்தால், தேனும் பாலும் கலந்தோடும் என்றனரே! வற்றாத ஜீவநதிகளெல்லாம்கூட கறசெயலாக இந்த மகானுபவர்கள் காலத்தில் மணற்காடாகக் கிடக்கின்றன! கொடுத்த வாக்குறுதிகளனைத்தும் காற்றோடுகலந்துவிட்டனவே! மக்கள் வாழ்க்கை எப்படி நடத்துவது என்பது கேள்விக்குரியதாக ஆகிவிட்டதே! இந்நாட்டின் பொருளாதார முற்றிலும் சீர்குலைந்து விட்டதே! ஆளுபவர்கள் சீமான்களோடு குலாவ நேரமிருக்கிறதே தவிர, பாமரன், பாட்டாளி, நாள் முழுவதும் வியர்வைச் சிந்தும் விவசாயி ஆகியவர்களின் நிலைபற்றிச் சிந்திக்க நேரமில்லையே! அரசாங்கத்தால் நிலையானத் திட்டத்தோடு எந்தக் காரியமும் செய்யப்படவில்லையே! எவ்வளவு நாட்களுக்கு நடைபெறும் இந்த "தர்பார்" ஆட்சி! மக்களின் உணவுத் திட்டம் அரசாங்கத்தினரால் சரியாக உருவாக்கப்படவில்லை என்பதற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அன்றாட நிகழ்ச்சிகளே போதுமான சான்றாகும்.

குடியரசின் லட்சணம்

இதைப் போன்றே வேறு பல பிரச்சினைகளும் வகைதொகையின்றி இருக்கின்றன. ஆளும் கூட்டத்தினர்க்கோ இவை பற்றிச் சிந்திக்க முடியவில்லை; திட்டம் தீட்ட நேரமில்லை: தீட்டினாலும் நடைமுறைக்குக் கொண்டுவர திடமானமனதில்லை. அவர்களுக்கு இவைபற்றி எடுத்துச்சொல்ல சட்ட சபையிலோ எதிர்க் கட்சியில்லை. ஒரு கூடைக் கல்லும் 'பிடாரி' ஆனது போல, அத்தனைப் பேரும் காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத் திட்டம் தவறு என்று உணர்ந்தாலும், கட்சி கட்டுப்பாட்டுக்குப் பயந்து வாயை அடைத்துக்கொள்ள வேண்டும். வெளியே இருப்பவர்கள் எடுத்துச் சொன்னால், சொல்பவர்களை அடக்குமுறை சாடுகிறது. ஆனால், இந்த ஆட்சிக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பெயர் ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தின் முழு உருவந்தான் ஜனவரி 26 குடியரசு!

(தொடரும்)

கோவை மாவட்ட தி. மு. கழக

முதல் மாநாடு

29-1-50 ஞாயிறு காலை 8-மணிக்கு

கணியூரில், தோழர் த. அ. முஹமது உசேன் ராவுத்தர் அவர்கள் இடத்தில் அமைந்திருக்கும்

"அர்ச்சுனன் பந்தலில்" நடைபெறும்

நகைச்சுவை அரசு

என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

வில்லுப் பாட்டுடன் மாநாடு துவங்கும்

மாநாட்டுத் தலைவர், கொடி உயர்த்துபவர்:

தோழர் ப. உ. சண்முகம்

(திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர்)

மாநாட்டைத் துவக்குபவர்:

தோழர் ஜி. பி. சோமசுந்தரம்

(பேளுக்குறிச்சி)

மாநாட்டில், பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரையும் மற்றும் கழகப் பிரசாரகர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்

★

இரவு 10-மணிக்கு

— சந்திரமோகன் நாடகம் —

பேட்ஜ்கள்!

"கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டுப் பந்தலில் கழகக் கொடிகள் நல்ல முறையில் பேட்ஜ்களாக சர்ட்டில் குத்திக்கொள்ளும் முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்.

ஒன்றின் விலை 0—4—0 அணா

வியாபாரிகளுக்கு 12½ சத வீதம் கழிவு உண்டு

சி. வி. நாகப்பன், கணியூர்.

இனி நடப்பவை

சென்னை:—குளை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், 29-1-50 ஞாயிறு காலை 10மணிக்கு குளை, வாத்தியார் கந்தப் பிள்ளைத் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில், தோழர் க. தங்கவேலன் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) "திருக்குறளில் காதல்" என்பதுபற்றி பேசுவார்.

* * *

சென்னை:—தோழர் சி. கணேசன் அவர்களின் தம்பி தோழர் சி. சண்முகத்திற்கும், தோழியர் சாவித்திரிக்கும், 29—1—50 ஞாயிறு காலை 4 மணிக்கு ஆயனூர் முத்தையா முதலித் தெரு 33 என்னுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும். புலவர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமை வகிப்பார். தோழர்கள் என். வி. நடராசன், இ. டி. டி. அரசு பேசுவார்கள்.

Printed & Published by T. M. Parthasarathy atthe MercantilePress. 2/45, Muthumari Chetty Street, Madras-1.